**செய்தி வெளியீடு எண்.868** **நாள்: 21.11.2009**

# கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தைச் சேர்ந்த 66 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் வீதம் 67 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட உதவித் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

தமிழகத்தில் பல்வேறுவகைத் தொழில்களிலும் ஈடுபட்டு எந்தவித பாதுகாப்பும், அவசரகால உதவிகளும் இல்லாத நிலையில் நாளும் உழைத்துவரும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களையும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் நல வாழ்வையும், முன்னேற்றத்தையும் கருதி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒவ்வொருவகைத் தொழிலுக்கும் தனித்தனியே அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார்கள்.

இந்த வகையில், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 13.5.2006 முதல் 15.11.2009 வரை 8 இலட்சத்து 71 ஆயிரத்து 740 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்த நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிகழ்ந்து மரணம் ஏற்பட்டால் 1 இலட்சம் ரூபாயும், விபத்தில் சிக்கி ஊனமடைந்தால் ஊனத்திற்கேற்ப 1 இலட்சம் ரூபாய் வரையிலும், இயற்கை மரணம் நிகழ்ந்தால் 15,000 ஆயிரம் ரூபாயும்;

உறுப்பினர்களின் குழந்தைகள் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு முதல், கல்லூரிகளில் தொழிற்கல்வி உட்பட அனைத்துவகைப் பட்டமேற்படிப்புகள் வரை அவரவர் படிக்கும் வகுப்புகளுக்கேற்ப 1,000 ரூபாய் முதல் 6,000 ரூபாய் வரையும்;

உறுப்பினரின் திருமணத்திற்கு 2,000 ரூபாயும்,

பெண் உறுப்பினரின் மகப்பேறு காலத்திற்கு 6 ஆயிரம் ரூபாயும்,

கண் கண்ணாடி வாங்கிட 500 ரூபாய் வரையும்;

60 வயதானால் முதியோர் உதவித் தொகையாக மாதம் 400 ரூபாயும்

– எனப் பல்வேறு திட்டங்களின்கீழ் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இதன்படி, இந்த அரசு பொறுப்பேற்றபின் 15.11.2009 வரை 1 இலட்சத்து 85 ஆயிரத்து 746 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் இதுவரை 57 கோடியே 49 இலட்சத்து 17 ஆயிரத்து 492 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் வாயிலாக உரிய பயன்கள் உடனுக்குடன் கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும் என்னும் விழைவோடு; திரு. பொன். குமார் அவர்களை அந்த வாரியத்தின் தலைவராக நியமித்துள்ளார்.**

**கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திடம் உதவி கோரி விண்ணப்பித்திருந்த 66 தொழிலாளர்களின் குடும்பங்களுக்குத் தலா 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் வீதம், நலத்திட்ட உதவிகளின்கீழ் விபத்து மரண உதவித் தொகையாக மொத்தம் 67 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (21.11.2009) வழங்கினார்.**

**இந்நிகழ்வின்போது, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவர் திரு. பொன். குமார், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர் டாக்டர் த. பிரபாகரராவ், இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையர் திரு. அ. சுகுமாரன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.**

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**